## தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியத்தின்

# இணையதளம் அறிமுகம் காண்கிறது!

சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியத்தின் (YAYASAN FALSAFAH DAN INSTITUSI SAIVA) இணையதளம் இப்போது செயல்படுகிறது. அறவாரியத்தின் வரலாறு, திட்டங்கள், செயல்பாடுகள், அறவாரியத் திருப்பணிகளில் பங்கெடுத்துக் கொள்வோருக்கான வழிகாட்டி ஆகியவற்றைக் காண்பதற்கு இணைய தளத்திற்கு வருகை தர வேண்டுகிறோம்.

அறவாரியத்தின் திருக்கோயில், சைவ சமயக் கல்லூரி ஆகியவற்றுக்கான திருப்பணிகள் தொடங்கிவிட்டன. கெர்லிங் மாவட்டத்தில் ஏழரை ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் இந்தத் திட்டம் நாற்பது முதல் நாற்பத்தைந்து மில்லியன் (நாலரை கோடி) மலேசிய ரிங்கிட் மதிப்பிலானது. இந்து சமயம் மற்றும் சைவ சமயத்தின் மேம்பாடு குறித்துச் சிந்திப்போரும் செயல்பட விரும்புவோரும் திருப்பணிக்கு உதவ முன்வருமாறு வேண்டுகிறோம்.

இவ் இணையதளத்தினை www.yayasansaiva.org அல்லது www.saivaaravaariyam.org என்னும் முகவரியில் அணுகலாம். அறவாரியத்தின் வரலாறு தொடர்பான செய்திகள், நிறைவேறி வரும் செயல்கள், படத்தொகுப்பு போன்றவற்றை இத்தளம் உட்கொண்டுள்ளது. இத்தளம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அமைந்துள்ளது.


இவ் இணையதளம் திருக்கோயில் மற்றும் சைவக் கலைக் கல்லூரித் திட்டத்திற்கு அறக்கொடை வழங்குவதற்கான களமாகவும் செயல்படும். மலேசிய நடுவண் வங்கியின் (Bank Negara) அங்கீகாரம் பெற்ற மின்வணிகத் தளத்தின் பயனுடன் பாதுகாப்பாக மின்னியல் முறையில் நன்கொடை அளிக்கலாம். மேற்கண்ட முகவரியில் நமது இணையதளத்தை அடைந்ததும் அறக்கொடைக்கான இணைப்பினைக் காணலாம்.


## இணையத்தில் உலாவலாம்!




1. மாதந்தோறும் நன்கொடை


இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் தாங்கள் விரும்பும் தொகையினைத் தொடர்ந்தாற்போல் தானியங்கி முறையில் (Recurring Donation) வழங்குவதற்குப் பதிவு செய்யலாம். பற்றட்டைகளைக் கொண்டு (Credit Card, Debit Card & ATM Card) கொண்டு வழங்கலாம்.












2. ஒரு முறை அல்லது அவ்வப்போது

இந்த இணைப்பில் வங்கிக் கணக்கு அல்லது பற்றட்டைகளின் மூலம் ஒரு முறை அல்லது அவ்வப்போது கொடையளிக்கலாம். ரிம. 100, 200, 500, 1000 என இணைப்புகள் அங்கு இருக்கும். இந்தத் தொகைகளிலும் அல்லது இவற்றின் மடங்குகளிலும் கொடையளிக்கலாம். எடுத்துக்காட்டுக்கு: ரிம. 2000 கொடையளிக்க விரும்பினால் ரிம. 1000 தேர்வு செய்து, கீழ்க்காணும்படி 2 என உள்ளிட்டு அத்தொகையினை வழங்கலாம். மலேசியாவின் எல்லா முன்னணி வங்கிகள் வழியாகவும் நன்கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றுபட்டால் நம் சமயத்திற்கு உண்டு வாழ்வு. இது வரை காணிக்கைகள் வழங்கித் திட்டத்தைச் செயல்படுத்திய அடியார்க்கு அறவாரியத்தின் இயக்குநர் அனைவரும் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சிவந்த கைகள் நீளட்டும்! தொண்டுகள் தொடரட்டும். அனைவருக்கும் திருவருள் நிறையட்டும்! சிவசிவ.

அன்புடன்
**முனைவர் நாகப்பன் ஆறுமுகம்**
தலைவர்,
சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியம்
அனைவருக்கும் சிவனருள் நிறைக!

மேலும் விவரங்கள் பெறுவதற்குத் தொடர்பு கொள்க.

**சிவத்திரு அனிதா: +60 17 614 0336**

ஆசிரியர் / Editor: முனைவர் நாகப்பன் ஆறுமுகம் / Dr. Nagappan Arumugam MA., Ph.D.
**Published by:** MATHESAN ENTERPRISE, A01-02, Palm Court, Jalan Berhala, 50470 Kuala Lumpur. H/P: 016-9691090
**Printed by:** PERCETAKAN CHEMY SDN BHD, NO 131&135, Jalan Sultan Abdul Samad, Brickfields, 50470 Kuala Lumpur

சிவனருள் ஆசிரியர் குழு :
சிவத்தமிழ்செல்வர் முனைவர் நாகப்பன் ஆறுமுகம்
சிவத்திரு அன்பரசன் அருணாசலம்
சிவத்திரு கமலநாதன் முனுசாமி